கரூர் நெரிசல் 41 பேர் பலியான சம்பவம் குறித்து ஜூலை 7 இல் அளித்த புகார் மனு

# விசாரணை மற்றும் உரிய நடவடிக்கைக்காக சி.பி.ஐ.க்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது!

## கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதிக்கு மேற்பார்வைக் குழுவின் தலைவர் நீதிபதி அஜய் ரஸ்தோகி பதில்!

புதுடெல்லி, ஜூலை 11–

கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி அவர்கள் 07.07.2026 அன்று கரூர் நெரிசல் சம்பவம் தொடர்பான சிபிஐ. விசாரணை மேற்பார்வைக் குழுவிடம் அளித்த புகாருக்கு மேற்பார்வைக் குழுவின் தலைவரான ஓய்வு பெற்ற நீதிபதி அஜய் ரஸ்தோகி அவர்களின் அலுவலகம் “ விசாரணை மற்றும் உரிய நடவடிக்கைக்காக அப்புகார் சிபிஐக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக” பதில் தெரிவித்துள்ளது.

கரூர் நெரிசல் சம்பவம் தொடர்பான சிபிஐ (CBI) விசாரணையை மேற்பார்வையிடுவதற்காக, உச்ச நீதிமன்றத்தின் SLP (Crl.) எண் 16359/2025 இன் உத்தரவின்படி அமைக்கப்பட்ட மேற்பார்வைக் குழுவிடம், திராவிட முன்னேற்றக் கழகத்தின் (திமுக) அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி அவர்கள் 07.07.2026 அன்று ஒரு புகாரை அளித்துள்ளார்.

அப்புகார் பரிசீலிக்கப்பட்டதாகவும், நியாயமான விசாரணை மற்றும் உரிய நடவடிக்கைக்காக அது சிபிஐக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் மேற்பார்வைக் குழுவின் தலைவரான ஓய்வுபெற்ற நீதிபதி அஜய் ரஸ்தோகி அவர்களின் அலுவலகம் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளது.

திருவள்ளூர் மாவட்ட தலைமை அரசு மருத்துவக் கல்லூரி

# மருத்துவமனையில் த.வெ.க. ஆட்சியின் அவல நிலை!

## அடிப்படை வசதியின்றி மக்கள் அவதி!

திருவள்ளூர் ஜூலை 11 –

திருவள்ளூர் மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வளாகம் திருவள்ளூர் மாவட்டத்தில் பெரியகுப்பம் கிராமத்தில் 8.48 ஏக்கர் பரப்பளவில் 6 அடுக்கு கொண்ட மருத்துவமனை கட்டிடம் கடந்த 2022 ஆம் ஆண்டு சுமார் 3 இலட்சத்து 60 ஆயிரம் சதுர அடி பரப்பளவில் தற்போது 1000 படுக்கை வசதியுடன் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

இதில் பொது மருத்துவ பிரிவு, பொது அறுவை சிகிச்சை பிரிவு, அதிதீவிர சிகிச்சை பிரிவு, விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவு, மயக்கவியல் துறை, பல் நலவியல் துறை, எலும்பியல் மற்றும் முடநீக்கியல் துறை, கண்மருத்துவத் துறை, காது மூக்கு தொண்டை மருத்துவத்துறை, தோல் மருத்துவத்துறை, நெஞ்சக மற்றும் காச நோய் மருத்துவத் துறை, இரத்த வங்கி, தீக் காயங்கள் சிகிச்சை அளிக்கும் பிரிவு, மனநல மருத்துவத்துறை, மேம்படுத்தப்பட்ட மத்திய ஆய்வகம், கதிரியக்கவியல் துறை, இயன்முறை சிகிச்சை பிரிவு, திரவ நச்சு நீக்கியல் பிரிவு மற்றும் 10 அறுவை சிகிச்சை அரங்கமும், 98 படுக்கை வசதியுடன், 6 திவிர, அதிதீவிர, உயர் சார்பு தீவிர சிகிச்சை பிரிவும் உள்ளது. இதில் அனைத்து விதமான உயிர் காக்கும் சிகிச்சை அளிக்கும் இயந்திரங்கள் உள்ளன. மகப்பேறு மற்றும் தாய்சேய் நல சிகிச்சை பிரிவுக்கென 200 படுக்கை வசதிகள் கொண்ட எம்சிஎச் வார்டு தற்பொழுது செயல்பட்டு வருகிறது.

இந்த மருத்துவமனை செயல்பட தொடங்கியது முதல் நாள்தோறும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட வெளி நோயாளிகள் இங்கு வந்து சிகிச்சை பெற்று செல்கின்றனர். திருவள்ளூர் மாவட்டம் மட்டுமல்ல அது ராணிப்பேட்டை மாவட்டத்தை சேர்ந்த அரக்கோணம் உள்ளிட்ட பகுதிகளில் ஏற்படும் விபத்துக்கள் மற்றும் அங்கு தீர்க்கப்படாத நோய்களுக்கு இங்கு வந்து சிகிச்சை பெற்று செல்கின்றனர். இந்நிலையில் திருவள்ளூர் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளை சேர்ந்த கிராம மக்கள் தங்களுக்கு ஏற்பட்டுள்ள உடல் உபாதைகளுக்கு மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று செல்வதுண்டு. அவ்வாறு வரும் புற நோயாளிகளுக்கு துண்டு சீட்டு ஒன்று எழுதி கொடுத்து அதை பதிவேற்றம் செய்து மருத்துவர்கள் சிகிச்சை அளித்து வந்தனர். இந்த தவெக ஆட்சியில் மருத்துவமனையில் ஆயிரம் கணக்கில் வரும் புறநோயாளிகள் குடிநீர் வசதி, கழிவறைகள் மூடியே கிடக்கின்றன. இதனால் துர்நாற்றம் வீசுகிறது.


ஆனால் கடந்த திமுக ஆட்சியின் போது வெளி நோயாளிகள் ஒரு முறை வந்தவர்கள் அடுத்த முறை வரும்போது மீண்டும் வரிசையில் நின்று வாங்காமல் நேரடியாக நோய் சம்பந்தப்பட்ட மருத்துவரை நேரில் சென்று சிகிச்சை பெற ஏதுவாக வெளி நோயாளி அட்டை ஒன்று வழங்க உத்தரவிட்டது.

அதன்படி மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் திருவள்ளூர் மாவட்டத்தை சேர்ந்த எந்த ஒரு நோயாளியும் இங்கு பதிவு செய்யும் போது தனது பெயர், முகவரி, செல்போன் எண், ரத்த வகை போன்ற விவரங்களை அதில் பதிவிட்டு அட்டை ஒன்றை வழங்குவார்கள். அந்த அட்டையை ஒரு முறை வந்தவர்கள் மற்றொரு முறை வரும்போது மருத்துவர்களை பார்ப்பதற்கான சீட்டு வாங்க வரிசையில் நிற்காமல் நேரடியாக மருத்துவரை சென்று பார்க்க ஏதுவாக இந்த அட்டை உதவியது.

இந்நிலையில் ஆட்சி மாற்றத்திற்கு பிறகு ஆதார் அட்டையையும் நோயாளிகளிடமிருந்து பெற்று அதனை ஆன்லைனில் பதிவேற்றம் செய்து அந்த லிங்க்கை நோயாளிகளின் செல்போனுக்கு அனுப்பிவைக்க உத்தரவிட்டுள்ளதாக கூறப்படுகிறது. இந்த லிங்க்கை பயன்படுத்தி அடுத்த முறை நோயாளிகள் மருத்துவமனைக்கு வரும் போது வரிசையில் நிற்காமல் செல்போனிலேயே எந்த நோய்க்கு எந்த மருத்துவரை பார்க்க வேண்டும் போன்ற விவரங்களை பதிவு செய்து நேரடியாக சென்று பார்க்க உதவும் என மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஆனால் மருத்துவமனைக்கு வரும் நோயாளியின் முழு விபரங்களையும் கணினியில் பதிவேற்றம் செய்து அந்த லிங்க் எடுத்து கொடுப்பதற்கு நேரம் ஆவதால் நோயாளிகள் நீண்ட நேரம் வரிசையில் காத்து நிற்க வேண்டிய நிலை ஏற்பட்டதாக நோயாளிகள் தெரிவிக்கின்றனர். சாதாரண ஏழை எளிய மக்கள் ஆண்ட்ராய்டு போன் இல்லாத பொதுமக்கள் என்ன செய்வது எனறு தெரியாமல் இருப்பதாகவும் தெரிவிக்கின்றனர்.

மேலும் புற நோயாளிகளின் அனுமதி சீட்டுக்காக கூடுதலாக கவுன்ட்டர்களை திறந்து நோயாளிகளை நீண்ட நேரம் நிற்க வைக்காமல் அனுப்ப ஏதுவாக மருத்துவமனை நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.




நாகை மாவட்டம் நாகை நகரம் நம்பியார் நகரில் உள்ள மாணவி ர.ஆசிதா என்பவரின் கல்விச் செலவுக்காக, ரூ.25,000 ம் கழகத் தலைவர் தளபதி அவர்கள் ஆணைக்கிணங்க கழக இளைஞர் அணி செயலாளரும, தமிழ்நாடு எதிர்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களால் தி.மு.க. இளைஞர் அணி அறக்கட்டளை சார்பில் வழங்கப்பட்ட தொகைக்கான காசோலையை நாகை மாவட்ட கழக அலுவலகத்தில் நாகை மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் வழங்கினார். உடன் மாவட்ட கழக பொருளாளர் மு.லோகநாதன் , மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பி.என். கார்த்தி, துணை அமைப்பாளர் தி.கலையரசன் , மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளர் ஆர்.கே.பிரதீப், நகர இளைஞர் அணி அமைப்பாளர் ஆர்.எஸ்.சத்தியன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்..

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பெரி. அழகு

**ஜூலை 11 (1997)**



கழகம் துவங்கிய காலத்திலிருந்தே கழகப் பணியாற்றியவர். திருப்பத்தூர் தொகுதியின் வட்டச் செயலாளராக பல ஆண்டுகளாகப் பணியாற்றியவர். பின்பு இராமநாதபுரம் மாவட்டப் பொறுப்பாளராகவும், தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் பணியாற்றியவர்.

சிவபுரிபட்டி ஊராட்சித் தலைவராகவும், சிங்கம்புணரி ஒன்றியப் பெருந்தலைவராகவும் பணியாற்றி மக்களிடம் நற்பெயர் பெற்றவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்றதுடன், குறிப்பாக இந்தி எதிர்ப்பு போராட்டத்திலும் – மிசா கைதியாக ஓராண்டு காலம் மதுரை மத்திய சிறையில் சிறைவாசம் அனுபவித்தவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

# நாடக ஆட்சியும் - நயவஞ்சக ஊடகங்களும்!


**த.**வெ.க. அமைச்சர் ஒருவர் பள்ளிக் குழந்தைகளிடம் ஆங்கில அறிவைச் சோதித்தும், அதன் சட்டமன்ற உறுப்பினர் ஒருவர் ஒரு லாரியை நிறுத்தி அதன் டயரை ஆய்வு செய்தும் 'தூய ஆட்சியை' நிலை நிறுத்திக் கொண்டிருக்கும்போது அரசு வழக்கறிஞர் பதவிகள் ஐந்து இலட்சம் ரூபாய் முதல் முப்பது இலட்சம் வரை விற்கப்படும் 'பொற்கால' ஆட்சி குறித்து த.வெ.க. வைச் சேர்ந்த ஒருவரே நீதிமன்றத்தில் புகார் மனு தாக்கல் செய்திருக்கும் சூழலில் இந்த நாடக ஆட்சி அரங்கேற்றும் நாடகங்களும் அதற்கு துணை நடிகர்களாக நடித்துக்கொண்டிருக்கும் ஊடகங்கள் ஆடும் ஆட்டமும் கொஞ்சமல்ல.

இதில் போட்டியே ' ரூட்' மாஃபியாவுக்கும் தமிழக வெகுசன ஊடகங்களுக்கும்தான். அரசுக்கு ஆதரவாகவும் தி.மு.க.வுக்கு எதிராகவும் பொய்களையும் புனை சுருட்டுகளையும் அதிகம் பரப்புவது யார் என்பதில்தான் போட்டி.

**கரூர் விவகாரம்**

கரூருக்கு முதலமைச்சர் விஜய் செல்வதை தடுக்க தி.மு.க. உச்சநீதிமன்றம் செல்கிறது என்ற பொய் பிரசாரத்தை ஊடகங்கள் கடந்த சில நாட்களாக உக்கிரமாக முன்னெடுத்தன. அதில் துளியேனும் உண்மை இருக்கிறதா?

**தி.மு.க. அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி உச்ச நீதிமன்றத்திடம் வைத்த கோரிக்கை த.வெ.க. அமைச்சர் ஆதவ் அர்ஜூனா “கரூர் சம்பவத்திற்காக கணக்குத் தீர்ப்போம், தன் மகனின் அரசியல் வெற்றிக்காக ஸ்டாலின் அரசு காவல் துறையை வைத்து மக்களை கொன்று குவித்தது” என்று பேசுகிறார். நீதிமன்ற விசாரணையிலிருக்கும் ஒரு வழக்கு குறித்து ஒரு அமைச்சர் இவ்வாறு பேசுவது விசாரணையை பாதிக்கும். எனவே அவர் மீது நீதி மன்ற வழக்கு தொடர வேண்டும், வழக்கில் சம்பந்தப்பட்ட கட்சி ஆட்சியதிகாரத்தில் இருப்பதால் இந்த சம்பவம் தொடராக பாதிக்கப்பட்ட மக்களிடம் பொது வெளியில் பேசக் கூடாது, பாதிக்கபட்ட மக்களுக்கு நல உதவிகளோ அரசு வேலைவாய்ப்போ வழங்குவது அரசின் உரிமை, ஆனால் அது கரூர் சம்பவம் வழக்கு விசாரணையில் இருப்பதால் நீதி மன்றத்தின் வழிகாட்டுதலுக்கு உட்பட்டு அவை வழங்கப்படவேண்டும்” அவ்வளவுதான் தி.மு.க. கோரிக்கை.**



**மனுஷ்ய புத்திரன்**
*மாநில ஆலோசகர்,*
*தி.மு.க தகவல்*
*தொழில் நுட்ப அணி*

இதில் முதலமைச்சரை கரூருக்கு போககூடாது என்ற கோரிக்கை எங்கே இருக்கிறது? அல்லது நீதிபதி குறிப்பிட்டதுபோல முதலமைச்சரின் பேச்சுரிமை பாதிக்கும் அம்சம் எங்கே இருக்கிறது? ஒரு முக்கியமான வழக்கு சம்பந்தமாக சம்பந்தப்பட்டவர்கள்சாட்சிகளை'influence'செய்யவோ 'manipulate' செய்யவோ கூடாது என கேட்பது சுதந்திமான விசாரணைக்கு கான அடிப்படைக் கோரிக்கை இல்லையா? ' என மகன் போனாலும் பரவாயில்லை, விஜய் ஆட்சிக்கு வரணும்', 'என் தம்பி போனாலும் பரவாயில்லை விஜய் ஆட்சிக்கு வரணும்' என்று பாதிக்கப்பட்டவர்களையே பேச வைத்தவர்களின் வரலாற்றோடு இந்தப் பிரச்சினையை சேர்த்துப் பார்க்க வேண்டும்.

அப்போதே தி.மு.க. அரசு தலா பத்து இலட்சம் ரூபாயை இறந்தோர் குடும்பத்திற்கு நிவாரணமாக வழங்கியது. பல வாரங்களுக்கு பிறகு விஜய் அந்த மக்களை தன் இடத்திற்கு வரவழைத்து தலா இருபது இலட்சம் ரூபாயை வழங்கினார். மக்களுக்கு உதவிகள் வழங்குவதில் ஆட்சேபணை இல்லை. ஆனால் இப்போது மறுபடியும் மறுநிவாரணம் வழங்கப்படுவதன் நோக்கம் என்ன? கரூர் சம்பவத்தின் ரத்த சாட்சிகள் அவர்கள் என்பதாலும் கரூரில் இடைத் தேர்தல் வருகிறது என்பதாலும் அன்றி வேறென்ன?

**உச்சநீதிமன்றம் 'இந்த வழக்கு உச்சநீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட சிறப்பு விசாரணைக்குழுவின் பார்வையில் இருப்பதால் அவர்களிடம் முறையிடுங்கள்' என்றதன் அடிப்படையில் அந்த வழக்கு திரும்பப் பெறப்பட்டு சிறப்பு புலனாய்வுக்கு குழுவிடம் முறையிட்டுள்ளது. இது ஒரு சாதாரண நீதிமன்ற நடைமுறை. உடனே ஊடகங்களில் தலைப்புச் செய்தி 'விஜய் கரூர் செல்ல இருந்த தடை நீங்கியது, தி.மு.க.வுக்கு நீதி மன்றத்தில் கடும் பின்னடைவு' என்றெல்லாம் பொய்களை வாரி இறைத்தார்கள். யார் தடை கோரினார்கள்? கோராத தடையை நீதி மன்றம் எப்படி நீக்க முடியும்? ஒரு குறைந்த பட்ச அறம் கூட இல்லாதா இழிநிலைக்க்கு உங்களை எது கொண்டு சென்றது?**

**செந்தில் பாலாஜி விவகாரம்**

இதே போன்ற ஒரு பொய்ப்ரப்புரையைத்தான் முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி மற்றும் அவரது சகோதரர்மீது ஊடகங்கள் பரப்பி வருகின்றன. த.வெ.கவின் குதிரைபேர அரசியல் தொடர்ந்து அம்பலமாகி வருவதை மடைமாற்ற புனையப்பட்ட கட்டுக்கதைதான் செந்தில் பாலாஜி ஒரு த.வெ.க சட்டமன்ற உறுப்பினரை சபாநாயகர்மீதான நம்பிக்கை இல்லாத தீர்மானத்தில் எதிர்த்து வாக்களிக்க தூண்டினார் என்பதும், அரசை கவிழ்க்க சதி செய்தார் என்பதும். எந்த ஆதாரமும் இன்றி, அடிப்படைத் தர்க்கமும் இன்றி சொல்லப்பட்ட குற்றச்சாட்டினை காவல்துறை ஒரு போலி வழக்காக பதிவு செய்தது. சம்பந்தமே இல்லாத சிலர் கைது செய்யப்பட்டு இந்த வழக்கினை ஜோடிக்க முயன்றனர். செந்தில் பாலாஜியும் அவரது சகோதரரும் தலைமறைவாக இருப்பதாகவும் அவர்களை காவல்துறை ' லுக் அவுட் ' நோட்டீஸ் ' தேடி வருவதாகவும் விமான நிலையங்களில் அவர்கள் தப்பிச் சென்று விடாதபடி கண்காணிக்கப்படுவதாகவும் செய்திகள் பரப்பப்பட்டன. என்ன அப்படிச் செய்தார் செந்தில் பாலாஜி?

தி.மு.க. சட்டத்துறை செயலாளர் என்.ஆர் இளங்கோ நீதிமன்றத்தில் ஆணித்தரமான வாதங்களை எடுத்துரைத்தார். “குற்றம் சாட்டியிருக்கும் சட்டமன்ற உறுப்பினர் இளையராஜா தன்னை செந்தில் பாலாஜி தரப்பு 26 ஆந்தேதி தொடர்புகொண்டதாக 29 ஆம் தேதி புகார் செய்கிறார்? அந்த மூன்று நாட்கள் என்ன செய்தார்? சதித்திட்டத்தை யோசித்துக்கொண்டிருந்தாரா? செந்தில் பாலாஜியையோ அவரது சகோதர்களையோ கைது செய்யபட்டவர்கள் சந்தித்தற் கான சாட்சியங்களோ அல்லது குரல் பதிகளோ உண்டா? ஆனால் தி.மு.க.வின் மீது களங்கம் கற்பிக்கும் வகையில் அரசுத் தரப்பிலிருந்து 'அரசைக் கவிழ்க்கும் எண்ணத்தோடு' இது செய்யப்பட்டது என்று சொல்லிக் கொண்டு வந்தார்கள். அப்படியே செய்திகளும் வெளியிடப்பட்டன. ஆனால் அந்தப் புகாரில் அரசைக் கவிழ்க்கும் சதி என குறிப்பிடப்பட்டதாக தகவல் இல்லை. காவல்துறையினரும் அரசு செய்திக் குறிப்புகளிலும் 'அரசைக் கவிழ்க்கும்' என்ற வார்த்தையை சேர்த்தே எழுதி வந்தனர். இதை நாங்கள் சுட்டிக் காட்டி வாதாடியதும் செந்தில் பாலாஜி, அசோக் குமார் ஜாமீன் மனுவை எதிர்த்த வழக்கில் ' அரசை கவிழ்க்கும் ' என்ற வார்த்தையை நீக்கி விட்டார்கள்', மொத்த முதல் தகவல் அறிக்கையும் சொல்லப்பட்ட எந்தக் குற்றச் சாட்டிற்கும் ஆதாரம் இல்லை என்று இருவருக்கும் நீதிமன்றம் முன் ஜாமீன் வழங்கியது” என்று குறிப்பிடுகிறார்.

**அரசு, காவல்துறை, ஊடகங்கள் அனைத்தும் ஒன்றாகச் சேர்ந்துகொண்டு எப்படி அவதூறுகளையும் கட்டுக் கதைகளையும் பரப்புகிறார்கள் என்பதற்கு இது ஒரு உதாரணம். அனிதா ராதாகிருஷ்ணன் கைது, தி.மு.க ஜென்ஸீ இளைஞர்கள் கைது போன்றவற்றில் நடந்தது போல செந்தில் பாலாஜி விவகாரத்திலும் த.வெ.க அரசும் அதன் கூலிப்படை ஊடகங்களும் மூக்கு உடைபட்டிருக்கின்றன.**

**நாடகத்தில் சில நகைச்சுவை காட்சிகள்**

த.வெ.க அரசு தனியார் மெட்ரிகுலேஷன் பள்ளிகளுக்கு வரன்முறையற்ற அனுமதி, மாநிலத்தின் நிதிச்சு மையை அதிகரிக்கும்வி.பி.ஜி.ராம்ஜிதிட்டத்திற்கு அனுமதி , ஆளுநர் தன்னிடமே மக்கள் புகார்கள் தரலாம் என சொல்லி போட்டி அரசு நடத்துவற்கு அனுமதி, பல்கலைக் கழக துணைவேந்தர் தேடுதல் குழுவை மூன்லிருந்து ஐந்தாக உயர்த்தி தி.மு.க. அரசு போராடிப் பெற்ற துணை வேந்தரை நியமிக்கும் உரிமை அரசுக்கே எனும் உத்தரவை நீர்த்துபோகச் செய்வதற்கு துணையாக செயல்படுதல் என பல துன்பியல் சம்பங்களை அரங்கேற்றிக் கொண்டிருக்கும்போது கொஞ்சம் பொழுது போக்கிற்காக சில நகைச்சுவை காட்சிகளும் அரங்கேறிக்கொண்டிருக்கின்றன.

அதில் திருமாவளவனுக்கும் வைகோவிற்கும் நடந்த மோதல் சுவாரசியமானது.திருமாவளவன் 'அமைச்சரவையில் சேர்ந்தாலே த.வெ.க. கூட்டணியில் சேர்ந்து விட்டதாக அர்த்தம் இல்லை. தி.மு.க.வுடனான நட்பு தொடர்கிறது' என்று கூறியிருந்தார். உடனே காங்கிரஸ் கட்சியின் தலைவர் மாணிக்கம் தாகூர் திருமாவளவன் மீது பாய்து “அமைச்சரவையில் இடம்பெற்றாலே அதில் நீங்களும் ஒரு அங்கம்தான். வார்த்தை விளையாட்டு வேண்டாம்” என்றார். மாணிக்கம் தாகூரை துரோகத்தின் போட்டியில் முந்த முயற்சிக்கும் வைகோ இது தொடர்பான கேள்விக்கு “திருமாவளவனின் இந்தக் கருத்துக்கு நோபல் பரிசு கொடுக்க வேண்டும்” என்று கிண்டல டித்தார். இதற்கு திருமா வளவன் 'நோபல் பரிசு கிடைத்தால் வைகோ விற்கு நன்றி' என பதிலடி கொடுத்துள்ளார்.

**பா.ம.கவிடம் த.வெ.க. காட்டி வரும் நெருக்கம் திருமாவளவனை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. தங்கள் அரசியல் எதிர்காலம் குறித்த நிச்சயமின்மையை ஏற்படுத்தியுள்ளது. பா.ம.க. வந்தால் த.வெ.க.விற்கு இடது சாரிகளோ வி.சி.க.வோ தேவையில்லை. இவர்களை கழற்றிவிடும் நோக்கத்தில்தான் மாணிக்கம் தாகூரையும் வைகோவையும் வைத்து த,வெ.க., வி.சி.க. தலைவரை வெளிப்படையாகத் தாக்குகிறார்கள் என்று கருத இடமிருக்கிறது.**

வி.சி.க. கூட்டணிக்கட்சிகளோடு மட்டுமல்ல, தனக்குள்ளும் கடும் முரண்பாட்டை சந்தித்து வருகிறது. வி.சி.க.வின் முண்ணனி தலைவர்கள் பலர் கடும் அதிருப்தியில் இருக்கின்றனர். ' ஆதி திராவிடர் நலத்துறை' என்ற பெயரை சமூக நீதித் துறை என மாற்றும் முடிவை வி.சி.க.வின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பிறுமான ரவிக்குமார் கடுமையாக் எதிர்த்துள்ளார். ' ஆதி திராவிடர் நலத்துறை என்ற பெயரை மாற்றவேண்டும் என வலதுசாரி சார்புகொண்ட சிலர் கடந்த சில ஆண்டுகளாகவே வலியுறுத்து வந்தனர். எனினும் இதற்கு முன்பிருந்த தி.முக, அ.தி.மு.க அரசுகள் இணங்கவில்லை. ஆதி திராவிடர் என்ற சாதி கடந்த, சமயச் சார்பற்ற அடையாளத்தை கொச்சையாக புரிந்துகொள்பவர்கள்தான் அதை மாற்ற வேண்டும் எனக்கோருகிறார்கள். அந்தக் கோரிக்கையை இந்த த.வெ.க. அரசு ஏற்றுக்கொண்டிருப்பது வேதனை அளிக்கிறது” என்கிறார்.

ஆனால் தனது கட்சி பொதுச் செயலாளரின் கருத்தை வி.சி.க சார்பில் அமைச்சரவையில் இடம்பெற்றுள்ள வன்னியரசு மறுக்கிறார். “சமூக நீதித்துறை என்ற பெயர் மாற்றம் சரியாகத்தான் வைக்கப்பட்டுள்ளது. முதல்வர் விஜய் தொலைநோக்கோடு இந்தப் பெயரை வைத்துள்ளார்” என்கிறார்.

**கூட்டணி நிலைப்பாடு குறித்த குழப்பம், கொள்கை குறித்த குழப்பம் என வி.சி.க. தடுமாறிகொண்டிருக்கிறது. பா.ஜ.க. நாடுமுழுக்க இருந்த தலித் இயக்கங்களை சிதைத்து தனக்கான உதிரி இயக்கங்களாக மாற்றியிருக்கிறது. இப்போது த.வெ.க மூலம் தமிழ்நாட்டில் அதை நிகழ்த்திக்கொண்டிருக்கிறது. தி.மு.க. கூட்டணியை த.வெ.க.வை நம்பி முறித்ததற்கான விலையை முதலில் வி.சி.க. கொடுத்துக்கொண்டிருக்கிறது. மற்றவர்களும் விரைவில் கொடுப்பார்கள்.**